1973 மார்ச் 27]

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, குழந்தைகளுக்கு இலவச உணவு அளிப்பதில் 'நச்சு கலந்துவிட்டது, நச்சு கலந்து விட்டது' நச்சுப் பொருள்களை, விஷப்பொருள்களை அதிலே கலக்கின்றார்கள் என்ற தோரணையில் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நச்சுப்பொருள்கள் அகற்றப்பட வேண்டியவைகள்தான். ஆகவே நச்சுப்பொருள்கள் இல்லாமல் குழந்தைகளுக்கு அளிப்பதற்காக, மதிய உணவை குழந்தைகளுக்கு அளிப்பதற்கு முன்னால் அதை ஆசிரியர்கள் ஒருவர் இருவர் சாப்பிட்டுப்பார்த்து 'டெஸ்ட்' செய்து, அதற்குப் பிறகு குழந்தைகளுக்கு அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனால் ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்ல. நூறு பேர், இருநூறு பேர் உணவு உண்ணும்பொழுது 10, 15, 20 பேர்கள்தான் பாதிக்கப் படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. மிகவும் பாதிக்கப்படுபவர்கள் ஒருவர் இருவர்தான். ஆகவே அந்த முறையில் எல்லோருமே சாப்பிடுகின்ற சூழ்நிலை ஏற்படாது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : திரு. சி. வி. ராஜ கோபாலுக்கு ஆசிரியர்கள் மேலே கோபம். என் கூடப் படித்துக் கொண்டு வந்தவர்கள். தேர்ட் பாரத்திலேயே 'பெயில்' ஆகி விட்டார்கள். அதனாலே அவருக்கு ரொம்பக் கோபம்.

திரு. செ. முத்துசாமி : அந்தக் காலத்தில் அரசர்களுக்கு உண்டு காட்டிகள் என்று உண்டு காட்டுவதற்காக ஒருவர் இருந்த தாகச் சொல்வார்கள். இப்போது உண்டு காட்டிகளாகப் பணிக்க வேண்டுமென்று உறுப்பினர் கருதுகிறாரா ?

திரு. சி. வி. ராஜகோபால் : குழந்தைகள் அனுபவிக்கின்ற அந்தக் கஷ்டத்தை ஆசிரியர்களும் அனுபவிக்கட்டும்.

Government Polytechnic Teachers Association

*278 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government Polytechnic Teachers Association has demanded greater promotional avenues for teachers in October 1972 ; and

(b) the details of their other demands made to the Government ?

அரசினர் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் சங்கம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களுக்கு, அதிக அளவு பதவி உயர்வு வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், அரசினர் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் சங்கம் கோரியுள்ளதா ?

(இ) அச்சங்கம், அரசுக்குக் கொடுத்த ஏனைய கோரிக்கைகளின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மற்ற கோரிக்கைகள் ஆவன :—

(1) அரசு பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக ஆசிரியர்களின் ஊழியப் பாதுகாப்பு.

(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் மூலம் முறையாக நியமனம் செய்யும்வரையில் துறையில் உள்ளவர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு தருதல்.

(3) வேறு துறையிலிருந்து ஊழியர்களை அரசு பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் நியமிப்பதைக் கைவிடுதல்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த மாதிரியான பாலிடெக்னிக்குகளிலே 'டெக்னிக்கல் ஸ்டாப்' 'நான் டெக்னிக்கல் ஸ்டாப்' என்று இருக்கக்கூடியவர்களுக்கு வெவ்வேறுவிதமான சம்பள விகிதங்கள் இருக்கின்றதா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன். எல்லோரும் ஒரேவிதமான சம்பள விகிதங்கள் பெறுகின்றார்களா என்பதையும் அறிய விரும்புகின்றேன். ஆங்கிலம், விஞ்ஞானம் போதிக்கக்கூடிய விரிவுரையாளர்களுக்கு ஒரு ஸ்கேலும், மற்ற டெக்னிக்கல் ஸ்டாப், அசோசியேட் லெக்சரர்ஸ், லெக்சரர்ஸ்க்கு வேறு விதமான சம்பள விகிதமும் இருக்கின்றதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1973 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றி விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் அறிந்து சொல்லலாம். பெரும்பாலும் கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் போன்றவைகளுக்கெல்லாம் கலைக் கல்லூரிகளிலிருந்து தான் நாம் அவர்களைப் பெறுகின்றோம். டெக்னிக்கல் ஸ்டாப் போன்றவர்களை எலெக்ட்ரிசிடி, பி.டபிள்யூ.டி. ஆகிய துறைகளிலிருந்து பெறுகிறோம். அதிலே வேறுபாடு இருக்கின்றதா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் அறிந்து சொல்லலாம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த இந்தக் கோரிக்கைகளை வைத்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகளின் மீது அரசும், இயக்குநர் அவர்களும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அதை நீண்ட நாட்களுக்கு நீடிக்காமல் விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி அவர்கள் கோரிக்கைகளைத் தந்திருக்கின்றார்கள். வேறு எந்தத் துறையிலிருந்தும் எடுக்கப்படாமலிருப்பதற்கு இதே துறையில் புரமோஷன் கிடைத்து அந்தப் பதவியிலே இருக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டால், அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இந்தத் துறையிலே பொருத்தமானவர்கள் இல்லாத நிலையில், வேறு துறை டெக்னிக்கல் பெர்சனை நாம் பெற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அந்தக் கட்டத்தைத் தவிர, இதிலே ஒருவர் இருந்து அவரை எடுக்காமல் வேறு ஒருவரை எடுத்தால், பாதகமாக முடியும். ஆகவே இந்தத் துறையிலே இருப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிலே புரோமோஷன் தரவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. தேர்வு ஆணைக் குழு தேர்ந்தெடுக்கிற வரையில் பதவி உயர்த்திக்கொண்டே போவது என்பது உகந்த முறையல்ல. தேர்வு ஆணைக் குழு நிரந்தரம் ஆக்குகிற நிலையில் பிறகு பதவி உயர்வு படிப்படியாக வரும். இப்போது பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை ஏற்று நடத்தக்கூடியவர்கள் அவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பற்றி நடவடிக்கைகள் எல்லாம் இந்தத் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

[1973 மார்ச் 27

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, 10, 12 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகும் தேர்வு ஆணைக் குழுவுக்குமுன் வரும் பொழுது அவர்கள் அந்தத் துறைக்குத் தகுதியற்றவர்கள் என்று தள்ளப்படுகிற முறையிலிருந்து அவர்களையே தேர்ந்தெடுப்பதற்கு அரசு ஒரு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியாக விண்ணப்பம் தந்தால், தனியாக ஆராயலாம்.

Supply of Medicines to the Hospitals.

* 279 *Q.*—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the medicines supplied to hospitals in the State do not reach them in time; and

(*b*) if so, the action taken by the Government thereon ?

மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் மருத்துவமனைகளுக்கு வினியோகம் செய்யப்படும் மருந்துகள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

THIRU G. SWAMINATHAN : Sir, when the indents are made by many of the hospitals to the Central Medical Stores, it takes a long time for the medicines to reach the hospitals. May I know how the Hon. Minister is able to give the answer that he has given ?